## ஒரு பார்வை - பகுதி 1

**"ளிஹார்" மூலம் விவாகரத்து செய்வது தடை செய்யப்பட்டது. உங்கள் தனிப்பட்ட உரையாடல்கள் உட்பட அனைத்தையும் அல்லாஹ் அறிந்தவன். பனூ நளீர் யூதக் கூட்டத்தினர் நபி (ஸல்) அவர்களைக் கொல்ல செய்த சதித்திட்டம் பற்றிய சம்பவத்தையும், அந்த நயவஞ்சகர்களை அல்லாஹ் எவ்வாறு அழித்தான் என்பதையும் ஸூரா அல்ஹஷ்ர் குறிப்பிடுகிறது.**

## தராவிஹ் - 24: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 58, அல்முஜாதிலா; வசனம்: 1 - 22; பிரிவு: 1 - 3

1. **(நபியே!) தன் கணவனுக்கு எதிராக உம்மிடம் விவாதிக்கொண்டு, அல்லாஹ்விடமும் முறையிட்டுக் கொண்டிருந்தவருடைய முறையீட்டை நிச்சயமாக அல்லாஹ் கேட்டுக் கொண்டான். அவன் உங்களிருவரின் வாக்குவாதத்தையும் கேட்டுக்கொண்டான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கின்றான். (ஸூரா - அல்முஜாதிலா; பிரிவு: 1)**

   ***(பின்னணி: அவ்ஸ் பின் ஸாமித் (ரலி) தனது மனைவி கௌலா பின்த் ஸஅலபா (ரலி) அவர்களிடம் கோபித்துக்கொண்டு "ளிஹார்" முறையில், "நீ எனக்கு தாய் போன்றவள்" எனக்கூறி அவரை விலக்கி வைத்தார். இதனால் அப்பெண், நபி (ஸல்) அவர்களிடம் வந்து நடந்ததை கூறி முறையிட்டார். இது பற்றி எந்த வஹீயும் இதற்கு முன் வராததால், நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெண்மணியை அமைதிப்படுத்தினார்கள். தனக்கு சிறு குழந்தைகள் இருந்தும் இவ்வாறு நடந்ததை எண்ணி வருத்தம் அடைந்த அவர், தனது***

*ஆதங்கத்தை இறைவனிடம் முறையிட்டார். இந்நிலையில் அல்லாஹ் "ளிஹார்" பற்றிய சட்டங்களை இறக்கினான்).*

2. “ளிஹார்” மூலம் (அதாவது, மனைவியை தன் தாய்க்கு ஒப்பானவள் என்று கூறி), விவாகரத்துச் செய்தால், அந்த மனைவி அவருக்குத் தாயாக ஆகிவிடமாட்டார். நிச்சயமாக இச்செயல் அபத்தமானது; மேலும் பொய்யானது. (ஸூரா - அல்முஜாதிலா; பிரிவு: 1)

3. நிச்சயமாக அல்லாஹ் வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்தையும் நன்கு அறிகிறான் என்பதை நீர் பார்க்கவில்லையா? (ஸூரா - அல்முஜாதிலா; பிரிவு: 2)

4. மூன்று நபர்கள் இரகசியம் பேசிக் கொள்ளும் போது நான்காவதாக அங்கு அல்லாஹ் இருக்கிறான். அல்லது ஐந்து நபர்கள் இரகசியம் பேசும் போது ஆறாவதாக அல்லாஹ் அங்கு இருக்கிறான். மேலும் இந்த எண்ணிக்கையைவிட குறைவாகவோ, அதிகமாகவோ இருந்து இரகசியம் பேசினாலும் அங்கும் அல்லாஹ் இருக்கிறான். எல்லா நிலையிலும், அல்லாஹ் அவர்களுக்கு சாட்சியாளனாகவும், கண்காணிப்பவனாகவும் இருக்கின்றான். (ஸூரா - அல்முஜாதிலா; பிரிவு: 2)

5. அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பும் மக்கள், அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பகைத்துக் கொண்டவர்களை நேசிப்பவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்களாக, தங்கள் மகன்களாக, தங்கள் சகோதரர்களாக, தங்கள் குடும்பத்தினராக இருந்தாலும் சரியே. (ஸூரா - அல்முஜாதிலா; பிரிவு: 3)

6. அத்தகையவர்களின் இதயங்களில், (அல்லாஹ்) ஈமானை பதியவைத்துவிட்டான். மேலும் அவன் தன்னுடைய

அருளைக்கொண்டு அவர்களைப் பலப்படுத்தியிருக்கிறான். (ஸூரா - அல்முஜாதிலா; பிரிவு: 3)

**ஸூரா - 59, அல்ஹஷ்ர்; வசனம்: 1 - 10; பிரிவு: 1**

7. வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்தும் அல்லாஹ்வை தஸ்பீஹு செய்து போற்றி புகழ்கின்றன. அவன் வல்லமை மிக்கவன்; ஞானம் மிக்கவன். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 1)

8. அல்லாஹ்தான் வேதக்காரர்களில் ஏக இறையை மறுத்தோரை, அவர்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றினான். (மதீனாவின் புறநகரில் வாழ்ந்துவந்த பனூ நளீர் என்ற யூதக் கூட்டத்தினர் நபியைக் கொல்ல வேண்டுமென்று இரகசிய உடன்படிக்கை செய்தனர். அதற்கான தகவல் இந்த வசனத்திலுள்ளது). (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 1)

9. அவர்கள் வெளியேறுவார்கள் என்று நீங்கள் நினைக்கவில்லை. அவர்களும், தங்களுடைய கோட்டைகள், தங்களை அல்லாஹ்விடமிருந்து காப்பாற்றும் என்று நினைத்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பாராத வகையில் அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு தண்டனை வந்துசேர்ந்தது. (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 1)

10. அதன் மூலம் அவர்களுடைய உள்ளங்களில் பயத்தை அல்லாஹ் உருவாக்கினான். அதனால், அவர்கள் தம் கைகளாலும், முஃமின்களுடைய கைகளாலும் தம் வீடுகளை இடித்தனர். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 1)

11. இந்த வேதனைக்குக் காரணம், அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் விரோதமாக நடந்தார்கள் என்பதுதான். அல்லாஹ்வுக்கு விரோதமாக யார் நடந்தாலும் (அவர்களைத்)

**தண்டிப்பதில் அல்லாஹ் கடினமானவன். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 1)**

## ஒரு பார்வை - பகுதி 2

நயவஞ்சகர்களின் இயல்பு ஷைத்தானின் செயல்களுடன் ஒப்பிடப்படுகிறது. நயவஞ்சகர்களின் முடிவு நரக நெருப்பாகும். முஸ்லிம்கள் தங்கள் எதிரிகளுடன் நட்பு கொள்வதற்கு எதிராக ஸூரா அல்மும்தஹினா எச்சரிக்கிறது. ஹாத்திப் பின் அபீபல்தஆ (ரலி) சம்பவம் மூலம் அது வலியுறுத்தப்படுகிறது . மேலும், முஸ்லிம்கள், இறை மறுப்பாளர்களுடன் திருமணம் செய்து கொள்ள வேண்டாம் என்று கட்டளையிடப்பட்டுள்ளது.

## தராவிஹ் - 24: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 59, அல்ஹஷ்ர்; வசனம்: 11- 24; பிரிவு: 2 - 3

1. நிச்சயமாக, அவர்களுடைய இதயங்களில் அல்லாஹ்வை விட முஸ்லிம்களாகிய உங்களைப் பற்றிய பயமே அதிகமாக இருக்கிறது. அதற்கு காரணம் அவர்கள் (உண்மையை) உணர்ந்து கொள்ளாத மக்களாக இருப்பது தான். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 2)

2. கோட்டைகளால் அரண் செய்யப்பட்ட ஊர்களிலோ அல்லது சுவர்களுக்கு அப்பால் இருந்து கொண்டோ அவர்கள் உங்களுடன் போர் புரிய நினைப்பார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து உங்களுடன் நேருக்கு நேர் போரிட மாட்டார்கள். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 2)

3. அவர்களுக்குள்ளேயே மோதிக்கொள்ளும் போக்கு மிகக் கடுமையாக உள்ளது. (இந்நிலையில்) அவர்கள் யாவரும் ஒன்றுபட்டிருப்பதாக நீர் எண்ணுகிறீர்கள். (ஆனால்) அவர்களுடைய இதயங்கள் சிதறிக் கிடக்கின்றன. இதற்குக் காரணம் அவர்கள் அறிவற்ற சமூகத்தார் என்பதுதான். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 2)

4. (பனூ நளீர் என்ற யூத கூட்டத்துடன் சேர்ந்த) நயவஞ்சகர்களின் நிலை ஷைத்தானுடைய உதாரணத்தைப் போன்றது. (அவன்) மனிதனை நோக்கி: “நீ (இறைவனை) நிராகரித்து விடு” என்று கூறுகிறான். அவ்வாறு மனிதன் நிராகரித்ததும், “நான் உன்னை விட்டும் ஒதுங்கிக் கொண்டேன்; (ஏனெனில்) நான் அகிலங்களுக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்வை அஞ்சுகிறேன்” என்றான். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 2)

5. நிச்சயமாக அவ்விருவரும் நரகத்தில் நுழைவிக்கப்பட்டு அதிலே என்றென்றும் தங்கி இருப்பர். அநியாயக்காரர்களின் கூலி இதுவேயாகும். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 2)

6. இந்த குர்ஆனை ஒரு மலை மீது இறக்கியிருந்தால், அல்லாஹ்வுடைய பயத்தினால் அம்மலை பணிந்து, நொறுங்கிப் போவதை (நபியே!) நீர் காண்பீர்! (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 3)

7. இந்த ஸூராவின் இறுதியில் அல்லாஹ்வினுடைய சில பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. *ஹுவல்லாஹுல்லதீ லாஇலாஹ இல்லாஹு... (அல்ஹஷ்ர்: 22 முதல் 24 வரையிலான வசனங்கள்).* அவனே அல்லாஹ்; வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை.

   அவன் மறைவானவற்றையும், வெளிப்படையானவற்றையும் அறிந்தவன், அவன் அளவிலா அருளாளன், நிகரிலா அன்புடையோன். அவன் அரசன், பரிசுத்தமானவன், சாந்தி அளிப்பவன், அபயமளிப்பவன். கண்காணிப்பவன். வல்லமை மிக்கவன், அடக்கி ஆள்பவன், பெருமைக்குரியவன், படைப்பாளன், பரிபாலிப்பவன், உருவம் கொடுப்பதில் சிறந்தவன், அவனே கண்ணியமானவன், நுட்பமானவன். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 3)

8. அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன. வானங்களிலும், பூமியிலும் உள்ளவை யாவும் அவனையே தஸ்பீஹு செய்கின்றன. அவனே (யாவரையும்) மிகைத்தவன்; ஞானம் மிக்கவன். (ஸூரா - அல்ஹஷ்ர்; பிரிவு: 3)

**ஸூரா - 60, அல்மும்தஹினா; வசனம்: 1 - 13; பிரிவு: 1 - 2**

9. முஃமின்களே! என் எதிரிகளையும், உங்கள் எதிரியையும் நீங்கள் உற்ற நண்பர்களாக ஆக்கி, அவர்களுடன் நீங்கள் நட்பு பாராட்ட வேண்டாம். (ஸூரா - அல்மும்தஹினா; பிரிவு: 1)

10. நீங்கள் இரகசியமாக அவர்களிடத்தில் அன்பு பாராட்டுகிறீர்கள். நீங்கள் மறைத்து வைப்பதையும், வெளிப்படுத்துவதையும் அல்லாஹ் நன்கு அறிந்தவன். மேலும், உங்களில் எவர் இதைச் செய்கிறாரோ, அவர் நேர்வழியை நிச்சயமாக தவற விட்டுவிட்டார். (ஸூரா - அல்மும்தஹினா; பிரிவு: 1)

*(இந்த வசனங்கள் அருளப்பட்டதன் பின்னணி நபித்தோழர் ஹாத்திப் பின் அபீபல்தஆ (ரலி), மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்த தோழர்களில் ஒருவர். பத்ரு போரிலும் கலந்து கொண்டவர். மக்கா நகரில் இவரது குடும்பம் இருந்தது. இவர் குரைஷிக் கிளையைச் சேர்த்தவர் அல்ல. இவர் மக்கா வெற்றி போருக்கு முன்னர் ஒரு கடிதத்தை எழுதி, தனது நம்பிக்கையான ஒரு பெண் மூலம் மக்கா குரைஷிகளுக்கு அனுப்பிவைத்தார். அதில் நபி (ஸல்) மக்கா போருக்கு தயார் செய்வதை குறிப்பிட்டிருந்தார். இந்த செய்தியை சொல்வதால் குரைஷிகள் தன் குடும்பத்தைக் காப்பாற்றுவார்கள் என எண்ணி அனுப்பி வைத்தார்.*

*இதனை ஜிப்ரயீல்(அலை) மூலம் அறிந்து கொண்ட நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் 2 சஹாபாக்களுடன் அப்பெண்ணை வழிமறித்து, அந்த கடிதத்தை கைப்பற்ற உத்தரவிட்டார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்கள் ஹாத்திப் பின்*

*அபீபல்தஆ (ரலி)வை விசாரணை செய்தார்கள். அவர், தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக அத்தவறை செய்து விட்டதாக வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்டார். அவரது முந்தய சேவைகளை கருத்தில்கொண்டு, நபி (ஸல்) அவர்கள், அவரை மன்னித்து விட்டார்கள். அல்லாஹ் இந்த வசனம் மூலம் "பகைவர்களுடன் நேசம் கொள்ள வேண்டாம்" என அழுத்தமான எச்சரிக்கை விடுத்தான்).*

11. **ஆனால் மார்க்க விஷயத்தில் உங்களிடம் போர் செய்து, உங்களை உங்கள் இல்லங்களை விட்டும் வெளியேற்றி, நீங்கள் வெளியேற்றப்படுவதற்கு உதவியும் செய்தார்களே, அத்தகையவர்களை நீங்கள் நண்பர்களாக ஆக்கிக் கொள்வதைத்தான் அல்லாஹ் தடுக்கின்றான். எனவே, அவர்களுடன் யாரேனும் நட்புக்கொண்டால் அவர்களே அநீதியாளர்கள் ஆவர். (ஸூரா - அல்மும்தஹினா; பிரிவு: 2)**

12. **இறை நம்பிக்கை கொண்டோரே! முஃமினான பெண்கள், ஹிஜ்ரத் செய்து உங்களிடம் வந்தால் அவர்கள் இறை நம்பிக்கை உடையவர்கள் என உறுதி செய்ய சோதித்துப் பாருங்கள். அவர்கள் உண்மை முஃமின்களென்று நீங்கள் அறிந்து கொண்டால், அவர்களை இறை மறுப்பாளர்களிடம் திருப்பி அனுப்பாதீர்கள். (ஸூரா - அல்மும்தஹினா; பிரிவு: 2)**

13. **மற்றும் நீங்கள் அப்பெண்களுக்குரிய மஹரை கொடுத்து அவர்களை விவாகம் செய்து கொள்வது உங்கள் மீது குற்றமில்லை. (ஸூரா - அல்மும்தஹினா; பிரிவு: 2)**

14. **மேலும் இறை நிராகரிப்புக் கொள்கையுடன் (உங்களிடம் மனைவியராக) உள்ள பெண்களை நீங்கள் பற்றிப்பிடித்துக் கொள்ள வேண்டாம். மற்றும் நீங்கள் அவர்களுக்காக செலவு செய்திருந்ததை (அவர்கள் போய்ச் சேருவோரிடம்) கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள். (அவ்வாறே ஈமான் கொண்டு உங்களிடம் வந்த பெண்களுக்காக) தாங்கள் செலவு செய்ததை**

இறை நிராகரிப்பாளர்கள் (உங்களிடம்) கேட்டுப் பெறட்டும். இதுவே அல்லாஹ்வுடைய கட்டளையாகும். உங்களிடையே அவன் (இவ்வாறே) தீர்ப்பு வழங்குகிறான். மேலும், அல்லாஹ் நன்கறிந்தவன்; ஞானம் மிக்கவன். (ஸூரா - அல்மும்தஹினா; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 3

**ஸூரா அஸ்ஸஃப்பில், தனக்குப் பிறகு வரவிருக்கும் "அஹ்மத்" என்ற பெயருள்ள தூதர் பற்றிய நற்செய்தியை ஈஸா (அலை) அறிவித்தது தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈஸா (அலை) அவர்களின் சீடர்கள் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஸூரா அல்ஜுமுஆவில் வெள்ளிக்கிழமை ஜுமுஆ தொழுகையின் முக்கியத்துவத்தையும், அதன் நெறிமுறைகளையும் விளக்கி கூறப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 24: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 61, அஸ்ஸஃப்; வசனம்: 1 - 14; பிரிவு: 1 - 2

1. **வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்தும் அல்லாஹ்வை தஸ்பீஹு செய்து, போற்றி புகழ்கின்றன. அவன் வல்லமை மிக்கவன்; ஞானம் மிக்கவன். (ஸூரா - அஸ்ஸஃப்; பிரிவு: 1)**

2. **ஈமான் கொண்டவர்களே! நீங்கள் செய்யாதவற்றை ஏன் சொல்லுகிறீர்கள்? இது அல்லாஹ்விடம் பெரும் கோபத்துக்குரியதாகும். (ஸூரா - அஸ்ஸஃப்; பிரிவு: 1)**

3. **மர்யம் (அலை) அவர்களுடைய மகன், ஈஸா (அலை) சொன்னதை நினைத்துப் பாருங்கள்: "இஸ்ரவேலர்களே! நான் உங்களுக்கு அனுப்பப்பட்ட இறைத்தூதர். நான் எனக்கு முன்னால் வந்த தௌராத் வேதத்தை உண்மைப்படுத்துபவனாகவும், எனக்குப் பிறகு வரவிருக்கும் "அஹ்மத்" என்ற பெயருள்ள தூதர் பற்றிய நற்செய்தியோடும் நான் வந்துள்ளேன்". ("அஹ்மத்" என்பது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மற்றொரு பெயர்). (ஸூரா - அஸ்ஸஃப்; பிரிவு: 1)**

4. ஆனால், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தெளிவான ஆதாரத்துடன் வந்த போது அவர்கள், “இது வெளிப்படையான சூனியம்” என்றனர். (ஸூரா - அஸ்ஸஃப்; பிரிவு: 1)

5. முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்களாக ஆகிவிடுங்கள். “அல்லாஹ்வுக்காக எனக்கு உதவி செய்பவர்கள் யார்?” என்று மர்யமின் மகன் ஈஸா (அலை) கேட்டார்கள். (ஸூரா - அஸ்ஸஃப்; பிரிவு: 2)

6. அதற்கு சீடர்கள், “நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்களாக இருக்கின்றோம்” என்று கூறினார்கள். எனினும், பனூ இஸ்ராயீல் மக்களில் ஒரு கூட்டம் ஈமான் கொண்டது; மற்றொரு கூட்டமோ நிராகரித்தது. (ஸூரா - அஸ்ஸஃப்; பிரிவு: 2)

7. ஆகவே ஈமான் கொண்டவர்களுக்கு, அவர்களுடைய பகைவர்களை வெற்றிகொள்வதற்காக நாம் உதவி அளித்தோம். அதனால் அவர்கள் வெற்றியாளர்களாய்த் திகழ்ந்தனர். (ஸூரா - அஸ்ஸஃப்; பிரிவு: 2)

ஸூரா - 62, அல்ஜுமுஆ; வசனம்: 1 - 11; பிரிவு: 1 - 2

8. வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்தும் அல்லாஹ்வை தஸ்பீஹு செய்து போற்றி புகழ்கின்றன. அவன்தான் உண்மையான பேரரசன்; பரிசுத்தமானவன்; யாவரையும் மிகைத்தவன்; ஞானம் மிக்கவன். (ஸூரா - அல்ஜுமுஆ; பிரிவு: 1)

9. ஈமான் கொண்டவர்களே! ஜும்ஆ உடைய தினம் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், அல்லாஹ்வை நினைவு கூறுவதற்கு விரைந்து செல்லுங்கள். அந்நேரத்தில் வியாபாரத்தை விட்டு விடுங்கள். நீங்கள் அறிந்தவர்களாக

இருந்தால் அதுதான் உங்களுக்கு சிறந்ததாகும். (ஸூரா - அல்ஜுமுஆ; பிரிவு: 2)

10. தொழுகை முடிந்து விட்டால், பூமியில் பரவிச் சென்று, அல்லாஹ்வினுடைய அருட்கொடைகளைத் தேடிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருங்கள். இதன் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம். (ஸூரா - அல்ஜுமுஆ; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 4

ஸூரா அல்முனாஃபிகூன்னில், நயவஞ்சகர்களின் இயல்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒன்று திரட்டப்படும் நாள், மக்களின் லாப நஷ்டங்களை தெரிவிக்கும் நாளாக இருக்கும் என ஸூரா அத்தகாபுன் மூலம் கூறப்படுகிறது. உங்களுடைய பொருட்செல்வங்களும், மக்கட்செல்வங்களும் உங்களுக்கு சோதனை தான் என்பதையும், அல்லாஹ்வுக்கான உங்கள் கடமைகளை புறக்கணிக்க வேண்டாம் என்பதையும் ஸூரா அத்தகாபுனின் இரண்டாம் பிரிவு வலியுறுத்துகிறது.

## தராவிஹ் - 24: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 63, அல்முனாஃபிகூன்; வசனம்: 1 - 11; பிரிவு: 1 - 2

பின்னணி: நபி (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் கூட்டத்தினரை வெற்றிகொண்டபின், இந்த ஸூரா அருளப்பட்டது. இது உஹுத் போருக்குப்பின் நிகழ்ந்தது. அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல் மற்றும் அவனுடன் சேர்ந்து மற்ற சில நயவஞ்சகர்கள் நபி (ஸல்) அவர்களுடன் இப்போருக்காக சென்றனர்.

இந்த நயவஞ்சகர்கள் பற்றி அறிந்துகொள்ள, நபி (ஸல்) மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு முன்புள்ள காலத்தை நினைவு கூறவேண்டும். அந்நேரத்தில் மதீனாவின் அவுஸ் மற்றும் கஸ்ராஜ் என்ற இரு முக்கிய குலத்தவர்கள் இருந்தனர். அவர்களுக்கிடையே நிகழ்ந்துகொண்டிருந்த சண்டை, சச்சரவுகள் காரணமாக மிகவும் சோர்வுற்ற அவர்கள், தாங்கள் ஒற்றுமையாக இருந்து ஒரு தலைவரை தேர்ந்தெடுத்து, அவரை அரசராக்க வேண்டும் என விரும்பினர். இதன் காரணமாக அப்துல்லாஹ் இப்னு உபை என்ற கஸ்ராஜ் குலத்தலைவன், இவ்விரு கூட்டத்திற்கும் சேர்ந்து தலைவனானான்.

நபி (ஸல்) மதீனாவுக்கு வந்தபிறகு அங்கு இஸ்லாம் ஒவ்வொரு வீடுகளிலும் நுழைந்து தழைத்தோங்கியது. இதனைப் பார்த்த அப்துல்லாஹ் இப்னு உபை செய்வதறியாது, தனது தலைமை பதவியை தக்க வைத்துக்கொள்ள இஸ்லாத்தை தழுவினான். ஆனால் உள்ளுக்குள் அவன் மிகவும் பொறும்மிக் கொண்டிருந்தான்.

இருந்தபோதிலும், நபி (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஜும்மா உரை நிகழ்த்தும்போது அவன் மக்களிடம், "நபி (ஸல்) அவர்கள் இறைவனால் நமக்கு அனுப்பப்பட்ட தூதர். அவர் கூறுவதை கேட்டு, அவருக்கு நாம் ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும்" என்று கூறிக்கொண்டிருந்தான். ஆனால் அவனது நயவஞ்சகத்தனம் ஒவ்வொரு நாளும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரு சமயம், நபி (ஸல்) அவர்களிடம் மிக கடினமான வார்த்தைகளால் விவாதித்துக்கொண்டான். உஹத் போரின்போது, அவன் தனது 300 பேர் கொண்ட கூட்டத்தை போர்க்களத்திலிருந்து திரும்ப அழைத்து வெளிப்படையாக ஏமாற்றிவிட்டான். மற்றொரு சமயம், நபி (ஸல்) அவர்களை கொல்ல சதி செய்த பனூ நளீர் என்ற யூத கூட்டத்திற்கு எதிராக முஸ்லிம்கள் படையெடுத்தபோது, இவன் எதிரிகளுக்கு ரகசியமாக செய்தி  அனுப்பினான். அதில், எதிரிகளுக்கு போரில் உதவுவதாகவும் தெரிவித்து இருந்தான். இவ்வாறாக அவனது நயவஞ்சகம் இருந்தது.

பனூ முஸ்தலிக் கூட்டத்தினரை வெற்றி கொண்டபின், அன்சாரிகளுக்கும், மக்கா முஹாஜிரீன்களுக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது. அதை நபி (ஸல்) அவர்கள் தலையிட்டு தடுத்து விட்டார்கள். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு, அப்துல்லாஹ் இப்னு உபை அவர்களுக்கிடையே பகைமையை வளர்த்தான். ஒரு சமயம் அவன் தனது அன்சாரி மக்களிடம், "அல்லாஹ்வின் தூதருடன் இருப்பவர்களுக்கு (முஹாஜிர்களுக்கு) செலவு செய்வதை நிறுத்திவிடுங்கள். அதனால், அவர்கள் அல்லாஹ்வின் தூதரிடமிருந்து விலகிச் சென்றுவிடுவார்கள். கண்ணியவான்களான நாம், இழிந்தோரான முஹாஜிர்களை மதீனாவிலிருந்து நிச்சயம் வெளியேற்ற வேண்டும்" என்று கூறினான்.

இதனை கேட்டுக்கொண்டிருந்த ஸைத் பின் அர்கம் (ரலி) மூலம் இச்செய்தி நபிகளுக்குத் தெரியவந்தது. உடனே  அப்துல்லாஹ்விற்கும் அவனுடைய நண்பர்களுக்கும் ஆளனுப்பினார்கள். அவன் நபியிடம் வந்த போது அது குறித்து நபியவர்கள் வினவினார்கள்.  "நாங்கள் அதைச் சொல்லவேயில்லை" என்று அவன் மறுத்துவிட்டான். அதை

நபி (ஸல்) அவர்களும் நம்பிவிட்டார்கள். தனது வார்த்தையை நம்பாமல், அப்துல்லாஹ் கூறிய பொய்யை நம்பியதால் அர்கம் (ரலி) மனவருத்தம் அடைந்தார்கள். அப்போது, இந்த நயவஞ்சகர்கள் உங்களிடம் வருகின்ற போது என்று தொடங்கும் இந்த (63:1வது) வசனத்தை அல்லாஹ் அருளினான். உடனே நபி (ஸல்) அவர்கள் அர்கம் (ரலி) அவர்களுக்கு ஆளனுப்பினார்கள். அவர் வந்தபோது தம்மீது அருளப்பட்டிருந்த வசனத்தை நபி (ஸல்) அவர்கள் ஓதிக்காட்டினார்கள். பிறகு, "ஸைதே! அல்லாஹ் நீ சொன்னதை உண்மை என்று தெளிவுபடுத்திவிட்டான்" என்று கூறினார்கள்.

நயவஞ்சகனான அப்துல்லாஹ் இப்னு உபைக்கு ஒரு மகன் இருந்தார். அவரது பெயரும் அப்துல்லாஹ் தான். இவர் சிறப்புமிக்க நபித்தோழர்களில் ஒருவராக விளங்கினார். இவர் தனது தந்தையின் செயல்களைப் பற்றி தெரிந்தவுடன் அவனிடமிருந்து விலகிக் கொண்டார். முஸ்லிம்கள் மதீனாவுக்குத் திரும்பிய போது மதீனாவின் நுழைவாயிலில் தனது வாளை உருவியவராக இவர் நின்று கொண்டார். அவரது தந்தை இப்னு உபை அங்கு வந்த போது தனது தந்தை என்று கூட பார்க்காமல் “அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நபி (ஸல்) உன்னை அனுமதிக்காத வரை நீ இங்கிருந்து செல்ல முடியாது. நிச்சயமாக நபியவர்கள்தான் கண்ணியமிக்கவர், நீதான் இழிவானவன்” என்று கூறி அவனைத் தடுத்து விட்டார். நபி (ஸல்) அங்கு வந்து அவனுக்கு மதீனாவிற்குள் செல்ல அனுமதி அளிக்கவே அப்துல்லாஹ் (ரலி), அவனுக்கு வழிவிட்டார்கள். மேலும், அவர் இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட போதே “அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் அவனைக் கொல்ல வேண்டும் என்று விரும்பினால் அதைச் செய்ய எனக்குக் கட்டளையிடுங்கள்! நான் அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவனது தலையை உங்களிடம் கொண்டு வருகிறேன்” என்று நபி (ஸல்) அவர்களிடம் கூறியிருந்தார்.

1. நபியே! நயவஞ்சகர்கள் உம்மிடம் வந்து, “நிச்சயமாக நீர் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றீர் என்று நாங்கள் சாட்சி சொல்கிறோம்” என்று கூறுகின்றனர். (ஸூரா - அல்முனா∴பிகூன்; பிரிவு: 1)

2. உண்மையில் நீர் அவனுடைய தூதர் என்பது அல்லாஹ்வுக்குத் தெரியும். நிச்சயமாக இந்த நயவஞ்சகர்கள் பொய் சொல்கின்றார்கள் என்று அல்லாஹ் நன்கறிவான். (ஸூரா - அல்முனா∴பிகூன்; பிரிவு: 1)

3. (நபியே!) நீர் அவர்களைப் பார்த்தால், அவர்களுடைய (கம்பீர) உடல் அமைப்புகள் உங்களை வியப்படையச் செய்யும். அவர்கள் பேசினால், அவர்களது பேச்சின் கவர்ச்சியால் நீங்கள் காது கொடுத்து கேட்பீர். (ஸூரா - அல்முனா∴பிகூன்; பிரிவு: 1)

4. இவர்கள் (சுவரில்) சாய்த்து வைக்கப்பட்ட வெற்று மரங்கள் போன்று பயனற்றவர்கள் ஆவர். இவர்கள் கேட்கும் ஒவ்வொரு சப்தமும் தங்களுக்கு எதிரானது என்று எண்ணுகிறார்கள். (ஸூரா - அல்முனா∴பிகூன்; பிரிவு: 1)

5. “மதீனாவுக்குத் திரும்பிச் சென்றவுடன், கண்ணியமானவர்களாகிய நாங்கள், தாழ்ந்தவர்களை அங்கிருந்து நிச்சயமாக வெளியேற்றிவிடுவோம்” என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் கண்ணியம் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும், மு∴மின்களுக்குமே உரியது; எனினும், நயவஞ்சகர்கள் (அதை) அறிந்து கொள்ளமாட்டார்கள். (ஸூரா - அல்முனா∴பிகூன்; பிரிவு: 1)

6. ஈமான் கொண்டவர்களே! உங்கள் பொருட்செல்வங்களும், மக்கட்செல்வங்களும், அல்லாஹ்வின் நினைப்பை விட்டும் உங்கள் கவனத்தைத் திருப்பிவிட வேண்டாம். (ஸூரா - அல்முனா∴பிகூன்; பிரிவு: 2)

7. நான் உங்களுக்கு அளித்த செல்வத்திலிருந்து உங்களுக்கு மரணம் வரும் முன்பே அல்லாஹ்வின் பாதையில் தர்மம்

செய்திடுங்கள். (இல்லையெனில்) மரணத்தின்போது, "என் இறைவா! சிறிது காலம் எனது மரணத்தை பிற்படுத்தி வைக்கக்கூடாதா? அப்படிச் செய்தால் நான் தர்மம் செய்து நல்லோர்களில் ஒருவனாக ஆகிவிடுவேன்" என்று சொல்ல நேரிடும். (ஸூரா - அல்முனா∴பிகூன்; பிரிவு: 2)

**ஸூரா - 64, அத்தகாபுன்; வசனம்: 1 - 18; பிரிவு: 1 - 2**

8. வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்தும் அல்லாஹ்வை தஸ்பீஹு செய்து போற்றி புகழ்கின்றன. அவனுக்கே ஆட்சி அதிகாரம் உரியது. அனைத்து புகழும் அவனுக்கே சொந்தமானது. மேலும், எல்லாப் பொருட்கள் மீதும் அவன் பேராற்றலுடையவன். (ஸூரா - அத்தகாபுன்; பிரிவு: 1)

9. அல்லாஹ் வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்தையும் அறிகின்றான். மேலும் நீங்கள் இரகசியமாக, மற்றும் வெளிப்படையாக செய்கின்ற அனைத்தையும் அல்லாஹ் அறிவான். மேலும் அல்லாஹ், உள்ளங்களில் உள்ளவற்றையும் நன்கு அறிவான். (ஸூரா - அத்தகாபுன்; பிரிவு: 1)

10. ஒன்று திரட்டப்படும் நாளான அன்றைய தினம் உங்களை அவன் ஒன்று திரட்டுவான். அதுதான் 'தகாபுன்' - இழப்பைச் சந்திக்கும் நாளாகும். (ஸூரா - அத்தகாபுன்; பிரிவு: 1)

11. ஈமான் கொண்டவர்களே! நிச்சயமாக உங்கள் மனைவியரிலும், உங்கள் பிள்ளைகளிலும் உங்களுக்கு எதிரிகள் இருக்கின்றனர். (அதாவது உங்களை நற்செயல்கள் செய்வதிலிருந்து விலகியிருக்க வைப்பதன் மூலம்). எனவே அவர்களைப் பற்றி நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். (ஸூரா - அத்தகாபுன்; பிரிவு: 2)

12. ஆனாலும் நீங்கள் (அவர்களின் குற்றங் குறைகளை) மன்னித்து விடுங்கள், அவற்றைப் பொருட்படுத்தாதீர்கள்;

சகித்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; மிக்க கிருபையுடையவன். (ஸூரா - அத்தகாபுன்; பிரிவு: 2)

13. நிச்சயமாக உங்களுடைய பொருட்செல்வங்களும், மக்கட்செல்வங்களும் உங்களுக்கு சோதனை தான். அல்லாஹ்விடம்தான் மகத்தான பிரதிபலன் உண்டு. (ஸூரா - அத்தகாபுன்; பிரிவு: 2)

14. உங்களால் முடிந்தவரை அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள். அவனுக்கு செவிசாயுங்கள். அவனுக்கு கட்டுப்படுங்கள். தர்மம் செய்திடுங்கள். அது உங்களுக்கே நன்மையானதாக இருக்கும். (ஸூரா - அத்தகாபுன்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 5

**விவாகரத்து தொடர்பான நிபந்தனைகளை ஸூரா அத்தலாக் மூலம் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் ஹலாலாக்கியதை, ஹராமாக்கி விடவேண்டாம் என ஸூரா அத்தஹ்ரீம் எச்சரிக்கிறது. நூஹ் (அலை) மனைவியும், லூத் (அலை) மனைவியும் கா∴பிர்களுக்கான உவமையாக கூறப்பட்டுள்ளது. மு∴மின்களுக்கு ∴பிர்அவ்னுடைய மனைவியும், மர்யம் (அலை) அவர்களும் உவமையாக கூறப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 24: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 65, அத்தலாக்; வசனம்: 1 - 12; பிரிவு: 1 - 2

1. **நபியே! (கூறுவீராக)! நீங்கள் பெண்களைத் "தலாக்" - விவாகரத்துச் செய்தால், அவர்களின் "இத்தா"வைக் கணக்கிட ஏற்ற வகையில் (மாதவிடாய் அல்லாத காலங்களில்) தலாக் - விவாகரத்துச் செய்யுங்கள். அந்தக் காத்திருப்புக் காலத்தைச் சரியாகக் கணக்கிடுங்கள். (ஸூரா - அத்தலாக்; பிரிவு: 1)**

   ***(பின்னணி: இந்த ஸூராவின் வசனங்களை, இதற்கு முன்பு ஸூரா அல்பகராவில் உள்ள 228 - 230 வசனங்களோடு சேர்ந்து புரிந்து கொள்ளவேண்டும்.***
   ***வசனம் 228: தலாக் கூறப்பட்ட பெண்கள், தங்களுக்கு மூன்று மாதவிடாய்கள் ஆகும்வரை பொறுத்து இருக்க வேண்டும். ஆனால் பெண்களின் கணவர்கள் (அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வதன் மூலம்) இணக்கத்தை நாடினால், அதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு).***

2. **உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். விவாகரத்து செய்யப்பட்ட பெண்களை (இத்தா-காத்திருப்புக் காலத்தில்) அவர்கள் (தங்கியிருக்கும்) வீட்டைவிட்டு நீங்கள் வெளியேற்ற வேண்டாம். அவர்களும் தாங்களாகவே வெளியேற வேண்டாம். அவர்கள்**

வெளிப்படையாக மானக்கேடான காரியத்தைச் செய்திருந்தாலே தவிர, (ஸூரா - அத்தலாக்; பிரிவு: 1)

3. இவை அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகள் ஆகும். யார் அல்லாஹ்வின் வரம்புகளை மீறுகிறாரோ, அவர் நிச்சயமாக தமக்குத் தாமே அநியாயம் செய்து கொள்கிறார். (ஏனெனில், சேர்ந்து வாழ்வதற்கான) சூழ்நிலை ஒன்றை இதன் பின்னரும் அல்லாஹ் உருவாக்கலாம் என்பதை அறியமாட்டீர்கள். *(இந்த வசனத்தை அபூதாவூதுவில் கூறப்பட்டுள்ள ஒரு ஹதீஸ் மூலம் விளங்கிக்கொள்ள வேண்டும். நபி (ஸல்) கூறினார்கள்: "அல்லாஹ் அனுமதித்தவற்றில், அவனுக்கு பிடிக்காத ஒன்று 'தலாக்' கூறுவது").* (ஸூரா - அத்தலாக்; பிரிவு: 1)

4. இத்தா - காத்திருப்பு தவணை நிறைவடையும்போது, அவர்களை முறைப்படி மனைவியாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். அல்லது முறைபடி அவர்களைப் பிரிந்துவிடுங்கள். (ஸூரா - அத்தலாக்; பிரிவு: 1)

5. அத்தகைய பெண்களை இத்தாவின்போது நீங்கள் குடியிருக்கும் இடத்திலேயே, உங்கள் வசதிக்குத் தக்கவாறு, அவர்களை இருக்க வையுங்கள். அவர்கள் நெருக்கடிக்கு உள்ளாவதற்கு இடமளிக்காதீர்கள். (ஸூரா - அத்தலாக்; பிரிவு: 1)

6. அவர்கள் கர்ப்பமுடையவர்களாக இருந்தால், அவர்கள் பிரசவிக்கும் வரை, அவர்களுக்காகச் செலவு செய்யுங்கள். மற்றும் அவர்கள் உங்களுக்காக (உங்கள் குழந்தைகளுக்குப்) பாலூட்டினால், அதற்கான பிரதிபலனை அவர்களுக்கு வழங்குங்கள். (ஸூரா - அத்தலாக்; பிரிவு: 1)

7. வசதியுடையவர்கள் தம் வசதிக்கேற்ப (இவ்விஷயத்தில்) செலவு செய்து கொள்ளவும். வசதி இல்லாதவர்கள் தமக்கு

**அல்லாஹ் கொடுத்ததிலிருந்து செலவு செய்து கொள்ளவும். எந்த ஆத்மாவையும் அல்லாஹ் தான் வழங்கியுள்ளதற்கு அதிகமாக சிரமப்படுத்த மாட்டான். கஷ்டத்திற்குப் பின்னர், அல்லாஹ் அதி சீக்கிரத்தில் வசதியை அருள்வான். (ஸூரா - அத்தலாக்; பிரிவு: 1)**

**<u>ஸூரா - 66, அத்தஹ்ரீம்; வசனம்: 1 - 12; பிரிவு: 1 - 2</u>**

8. **நபியே! உங்களது மனைவிமார்களைத் திருப்தி படுத்துவதற்காக அல்லாஹ் உங்களுக்கு ஹலாலாக்கிய ஒன்றை நீங்கள் ஏன் ஹராமாக்குகின்றீர்கள்? (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 1)**

9. **நபியவர்கள் தன் மனைவியர்களில் ஒருவரிடம் இரகசியமாகச் சொன்ன செய்தியினை, அம்மனைவி அடுத்தவர்களிடம் பகிர்ந்து கொண்டபோது, அதனை அல்லாஹ் நபியவர்களுக்கு அறிவித்துக் கொடுத்தான். (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 1)**

10. **இரகசியம் வெளியானது குறித்து நபி (ஸல்) அவர்கள், சம்மந்தப்பட்ட மனைவியிடம் கேட்ட போது, “யார் உங்களுக்கு இதைச் சொன்னது” என்று மனைவி கேட்டார்கள். (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 1)**

11. **“எல்லாம் அறிந்த ஒருவன்தான் (அல்லாஹ்), இதனை எனக்கு அறிவித்துக் கொடுத்தான்” என்று நபியவர்கள் பதில் சொன்னார்கள். (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 1)**

12. **நீங்களிருவரும் (இந்த சம்பவத்தில் தொடர்புடைய ஹஃப்ஸா (ரலி), ஆயிஷா (ரலி)) அல்லாஹ்விடம் நீங்கள் செய்த தவறுக்காக பாவமன்னிப்புத் தேடி விட்டால், நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள். நீங்களிருவரும் நபிக்கெதிராக ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் அவருக்கு உதவியாளனாக இருக்கின்றான். மேலும்**

ஜிப்ரயீல் (அலை) அவர்களும், ஸாலிஹான மு:மின்களும், வானவர்களும் நபிக்கு உதவியாளராக இருக்கின்றனர். (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 1)

*(இந்த சூராவின் பின்னணி:*

*இது குறித்து புகாரீயிலும் முஸ்லிமிலும் பதிவாகியுள்ளது. நபி (ஸல்) அவர்களுடைய மனைவியர்களில் ஒருவரான ஜைனப் (ரலி) அவர்களுடைய வீட்டில் வழக்கத்திற்கு மாற்றமாக சற்று கூடுதலான நேரம் நபியவர்கள் தங்க நேரிட்டது. நபி (ஸல்) அவர்கள் அந்த வீட்டில் தேன் சாப்பிட்டது தான் இந்த தாமதத்திற்கான காரணமென்பதை ஆயிஷா (ரலி) அவர்களும், ஹ:ப்ஸா (ரலி) அவர்களும் தங்களின் விசாரணையில் கண்டு பிடித்தனர். இதனால் ஆயிஷா அம்மையாரும், ஹ:ப்ஸா அம்மையாரும் சற்று பொறாமை கொண்டு, அடுத்த முறை நபியவர்கள், ஜைனப் அம்மையாருடைய வீட்டிலிருந்து தங்களுடைய வீட்டிற்கு வருகின்ற போது "கெட்ட வாடை அடிக்கின்ற ஏதேனும் அதாவது, ம:காபிர் என்ற பழத்தை நீங்கள் சாப்பிட்டீர்களா?" என அவர்களிடம் கேட்க வேண்டுமென்று திட்டம் தீட்டினார்கள்.*

*நபி (ஸல்) அவர்கள் தன்னிடமிருந்து அப்படிக் கெட்ட வாடை வருவதை வெறுத்தார்கள். எனவே "இனி நான் ஒரு போதும் தேனைச் சாப்பிட மாட்டேன்" என்றும் சொன்னார்கள். நபியவர்கள், தன் மனைவியிடம் இதுபற்றி கூறிய பிறகு, இவ்விஷயத்தை இரகசியமாக வைத்துக் கொள்ளுமாறும், இதனை யாரிடமும் சொல்லி விட வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் இரகசியம் கசிந்து விட்டது.*

*இது ஒரு சாதாரண மனிதருக்கு சிறிய விஷயமாக இருக்கலாம். ஆனால், நாயகத்தைப் பொருத்தவரையில் இது மிக பெரிய தர்மசங்கடமான விஷயம். அல்லாஹ், 'ஹலால்' என்று அறிவித்த ஒன்றை (தேனை) நபியவர்கள் சாப்பிட மாட்டேன் என்று சொல்லி தன்னளவில் அதை ஹராமாக்கி (தடை செய்து) விட்டார்கள். இது தவறு என அல்லாஹ் தனது*

*வசனத்தில் கூறிவிட்டான். அதனால்தான், நபிமார்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியும் அல்லாஹ்வால் முறைப்படுத்தப்படுகிறது. அவர்களது செயல்கள் அனைத்தும், மிக சாதாரணமானதாக இருந்தால்கூட, அல்லாஹ்வின் சட்டங்களுக்கு மாறாக இருக்கக்கூடாது).*

13. ஈமான் கொண்டவர்களே! நல்ல மனதோடு அல்லாஹ்விடம் பாவமன்னிப்புப் கேளுங்கள். உங்கள் இறைவன் உங்கள் பாவங்களை போக்கி, உங்களை ஆறுகள் ஓடிக் கொண்டு இருக்கும் சுவனச் சோலைகளில் பிரவேசிக்கச் செய்வான். (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 2)

14. நூஹ் (அலை) மனைவியையும், லூத் (அலை) மனைவியையும் கா.்பிர்களுக்கான உவமையாக அல்லாஹ் எடுத்துரைத்தான். (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 2)

15. அவர்கள் இருவரும் (நூஹ் (அலை), லூத் (அலை) ஆகியோரின் மனைவிமார்கள்) அல்லாஹ்வுடைய நேர்மையான அடியார்களைத் திருமணம் செய்து கொண்டனர். பிறகு அவ்விருவரும் அந்த நல்லோர்களுடைய நேர்வழிக்கு மாறு செய்தனர். ஆகவே நபிமார்களாகிய அந்த இருவரும், அல்லாஹ்வுடைய வேதனையிலிருந்து அம்மனைவிமார்களை தடுக்க முடியவில்லை. அந்த இரு மனைவிகளுக்கும் “நரகத்திற்கு செல்லும் மற்றவர்களுடன் சேர்ந்து நீங்களும் நுழையுங்கள்” என்று சொல்லப்பட்டது. (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 2)

16. மு.்மின்களுக்கு .்பிர்அவ்னுடைய மனைவியை அல்லாஹ் எடுத்துக்காட்டாகக் கூறுகிறான். அம்மனைவி அல்லாஹ்விடம், “என் இறைவா! சுவர்க்கத்தில் உன்னிடம் எனக்கென்று ஒரு வீட்டை கட்டுவாயாக! .்பிர்அவ்னிடமிருந்தும், அவனுடைய செயலிலிருந்தும் என்னைக் காப்பாற்றுவாயாக! மேலும், அநியாயக்கார

கூட்டத்திலிருந்தும் என்னைக் காப்பாற்றுவாயாக!" என்று வேண்டினார்கள். (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 2)

17. இம்ரானுடைய மகள் மர்யமையும், முஃமின்களுக்கு அல்லாஹ் எடுத்துக்காட்டாகக் கூறுகிறான். அவர் தன்னுடைய கற்பைப் பாதுகாத்திக் கொண்டார். அவரில் அல்லாஹ், தன்னுடைய ரூஹை - உயிரை ஊதினான். அவர் தம் இறைவனின் வார்த்தைகளையும், வேதத்தையும் நம்பினார். மேலும் அவர் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவோர்களில் ஒருவராக இருந்தார். (ஸூரா - அத்தஹ்ரீம்; பிரிவு: 2)

-----------------------------------------------